விரோதி ௵ (1889) ஆவணி மீ உஅ ஆரம்பமானது.

பதிவுசெய்யப்பட்டது.

# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும், குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**பத்திரக் கிரயம்.**

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ௵ 1-க்கு | ரூ. | 5-60 |
| வெளியூர், இந்தியா: | " | ரூ. | 9-40 |
| தொலைவாய்ப்பகுதி: | " | ரூ. | 9.40 |
| தனிப்பிரதி: | | சதம் | 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

| | | | |
|---|---|---|---|
| முதன்முறைக்கு:—ஒருகலம் | | ரூ. | 9-40 |
| " | அரைக்கலம் | ரூ | 5-00 |
| " | கால்கலம் | ரூ | 3-15 |
| " | ஒரு அங்குலம் | சதம் | 65 |

அடுத்த முறைகட்கு மேற்குறித்தவைகளிற் பாதி விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றி கவனிக்கப்படா

புத்தகம்—௯௧. } யாழ்ப்பாணம்:—விபவ௵ வைகாசி௴ ௩௨; (1928 மே௴ 14) திங்கட்கிழமை. { இலக்கம்—அ௩.

உ

கணபதிதுணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவமபூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரமபூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர்தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென்றேது
மதம்பூத்தவி நாயகன்றன் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து மெச்சுபத்திரங்களையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை சாவினயபாததில உலகனமைககாக பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்திரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பிதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ, சார்ப்பருப்பு, பாதமபருப்பு, சாத்தாவாரி, கீர்முள்ளிவிதை, நாகபூ வங்கபஸ்பம, அப்ரக்பஸ்பம, பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது.

இதனால் கிரிழிவு, கீர்க்கடுப்பு, கீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம பித்தகாமாலை, பித்தபாணடு, பீனிசம, கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற் சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதக வாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை ரூத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைரூத்தலுக்கு ரூபா ௧0. கால் ரூத்தலுக்கு ரூபா ௫. தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாவிராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன்மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகப்பிள்ளை,
சிவஞான ஆரோக்கியசுகாதாரவைத்தியசாலை
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

---

### கௌரவ ஸேர் பொன் இராமநாதனவர்கள் இயற்றிய நூல்கள்.

1. செந்தமிழ் இலக்கணம் முதற்பாகம் (எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும்) நன்னூற் சூத்திரங்களைத் தழுவி இலகுவான உரைநடையில் இயற்றப்பெற்றது. 545 பக்கங்கள் கொண்டது. உயர்ந்த பதிப்பு ரூபா 3-00. சாதாரண பதிப்பு ரூபா 2 அணு 8.
2. பகவத்கீதா — தமிழ் மொழிபெயர்ப்பும் விருத்தியுரையும் 517 பக்கங்கள் கொண்டது ரூபா 2-00.
3. திருக்குறள் பாயிரமும் இராமநாதீயம் என்ற விருத்தியுரையும் 143 பக்கங்கள் கொண்டது ரூபா 1-00.

மானேஜர்,
இராமநாதன் கல்லூரிப் புத்தகசாலை,
(H 61) சுன்னாகம், யாழ்ப்பாணம்.

---

### ஜாதக விளம்பரம்.

ஜாதகபலன் அறியவிரும்புவோர் ஜாதகக் குறிப்பையாவது, அல்லது பிறந்த வருஷம், மாதம், திகதி, கிழமை, நேரம், ஆண், பெண், பிறந்த ஊர் இவைகளைத் தெளிவாக எழுதி அனுப்பித் தற்கால பலன் அறிய ரூபா 1—00

ஜாதகக் குறிப்புக்கள் ரூபா 1, 2, 7, வரையிலும், ஜாதகங்கள் 10 ரூபாய் முதல் 150 ரூபா வரையிலும் எழுதிக்கொடுக்கப்படும்.

ஆரூடம் ஞாயிறு வியாழக்கிழமைகளில் சொல்லுவோம். கடித மூலமாய் அறிய விரும்புவோர் கடிதம் எழுதும் நேரத்தைக் குறிப்பிட்டு எழுதவும். மூன்றுகேள்விகளுக்குட்பட ரூபா 1. மேற்பட்ட ஒவ்வொருகேள்விக்கும் சதம் 25 (அணு 4.)

மற்றும் விபரங்கள் கடித மூலமாயறிந்து கொள்ளலாம். பதில் வேண்டுவோர் முத்திரை (ஸ்டாம்பு) அனுப்புதல் வேண்டும்.

விலாசம்:—
க. கனகசபை.
சோதிடர்,
அன்னசத்திரத்தடி,
கந்தர்மடம்,
(Q. 101.) யாழ்ப்பாணம்.

---

## திருவாலங்காட்டுத் தேர்த் திருப்பணி.

—:o:—

மூர்த்தி தலம் தீர்த்தம் வாய்ந்ததும், பஞ்ச சபைகளுள்ளே ரத்தினசபையை உடையதும், சமயகுரவர், காரைக்காலம்மை, அருணகிரிநாதர், பட்டணத்தடிகள் முதலிய மகான்களின் பாடல் பெற்றதும் ஆகிய திருவாலங்காடென்னும் வடாரணிய க்ஷேத்திரத்திலே நெடுகாள் ரதமின்றி யிருந்தமையால், திருவருளை முன்னிட்டு ஓர் ரதத்தை நூதனமாயமைக்க ஆரம்பித்து இலங்கைவாசிகள் உபகரித்த பணத்தைக்கொண்டு அத்தேசத்திலுள்ள அருமையான மரங்களும் சீமை இருசு (அச்சு) களுந் தருவித்து, இதற்கென அமைக்கப்பெற்ற தகரக் கொட்டகையிலே, பிரபவ௵ கார்த்திகை௴ ௧௩௨ நிகழ்ந்த சுபதினத்திலே முகூர்த்தஞ்செய்து இதுவரை சதுரப்பட்டடை மட்டம் வேலை நிறைவேறிவருகிறது. இத்திருப்பணி நன்கு பூர்த்தியாக இன்னும் சுமாரபதினாயிரம் ரூபா வரையில வேண்டியதாயிருப்பதால் சிவநேயச் செல்வர்களனைவரும் தங்கள் தங்களாலியன்ற பொருளுதவி இத்திருப்பணியை இனிது முற்றுவித்து வடாரண்யேஸ்வரப்பெருமானுடைய திருவருளைப்பெறும்வண்ணம் வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
சச்சிதானந்தராஜயோகி,
(T S W Y Swamy.)

திருவாலங்காடு (போஸ்ட்)
விபவ௵ சித்திரை௴ ௩௩௨,
(Q.102.)

---

### விளம்பரம்.

எனது பரிபாலனத்துட்பட்ட காரைநகர் மேற்கு சிவஞானோதய வித்தியாசாலைக்கு 3-ம் தராதரப்பத்திரம் அல்லது 2-ம் தராதரப்பத்திரம்பெற்ற ஓர் ஆண் உதவி உபாத்தியாயர் தேவை. விருப்பமுடையவர் என்னைக்கண்டு ஒழுங்கு செய்துகொள்ளவும்.

ப. சண்முகம்,
விதானை,
காரைநகர்.

(Mis 1202)

---

### வெற்றிலை! வெற்றிலை!! வெற்றிலை!!!

வியாபாரிகளே! உங்களுக்கு வெற்றிலை தேவையானால் கீழ்க்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதுங்கள். இலங்கையிலுள்ள மிகவுந் திறமான வெற்றிலை இங்கே மிக மலிவான விலைக்குக் கிடைக்கும். எந்தத் தினிசான வெற்றிலையும் இலங்கையிலுள்ள எந்த இடங்களுக்கும் புகையிரதமூலமாக எப்பொழுதும் அனுப்பலாம். விசேஷமாகக் கலியாணவீடு மற்றுங் கொண்டாட்ட தினங்கள் முதலியவற்றிற்கு வெற்றிலை அனுப்புவதற்கு எப்பொழுதும் ஆயத்தமாக விருக்கிறோம். சென்ற 36 வருஷங்களாக இலங்கையிலுள்ள பல பாகங்களிலும் மிகவும் திருப்திகரமான வியாபாரஞ் செய்திருக்கிறோம்.

எமது விலாசத்திற்கு ஒரு தந்தி மணி ஓடர் சமீபமான புகையிரதஸ்தானத்தைக் குறிப்பிட்டனுப்பினால் அடுத்த புகையிரத மூலமாகவே வெற்றிலை யனுப்புவோம். அயலூர்களுக்கே எந்தக்காலமும் நாங்கள் வெற்றிலை அனுப்பிப் பெரிய வியாபாரஞ் செய்துவருகிறோம். ஒருமுறை எங்களிடத்தில் நீங்கள் வெற்றிலை வாங்கினால் பின் வேறோரிடத்திலும் வாங்க மாட்டீர்கள். இது திண்ணம்! எங்கள் தந்திவிலாசம் ஆக இரண்டு சொற்களேயுடையன.

மற்றும் விபரங்களுக்கு எழுதவும்.

S. P. A. மகிறிஸ் அப்புகாமி,
கம்பகா.

S. P. A. Magiris Appuhamy,
Gampaha - W. P

தந்தி விலாசம்:—
மகிறிஸப்புகாமி,
கம்பகா.

Tel. Add:—"Magrisappuhamy",
(H. 62) Gampaha.

---

### வியாபாரத்தில் விர்த்தியடைய விருப்பமா?

இந்தப் புத்தகத்தை வாசியுங்கள்.

ஒவ்வொரு வியாபாரியும் தொழிற்சாலை அதிபரும் முதலாளியும் தங்கள் தங்களுக்கு உகர்தபடி விளம்பரவழியைத் தேடிக்கொள்ளவும், அதின்படி சுருக்கமான செலவில் சிறந்த விளம்பர சகாயத்தைப் பெற்று வியாபார விர்த்தியை யடையவுந் துணையான நூல்.

### வியாபார விர்த்தி விளம்பர யுக்தி.

தமிழில்முதற்பதிப்பு விலைரூபா 1 தபாற்கூலி அணு 4 முற்பணம்அனுப்புக.

தமிழில் இதுவரை வெளிவராத அரிய நூதன விளம்பர விஷயங்களைத் தாங்கிவரும். நவீன விளம்பர வித்தை விற்பன்னர் ஒருவரால் இனிய எளிய தமிழில் எழுதப்பட்டது. 6¾×4¼ அங்குல அளவுள்ள 200 பக்கங்கள். அழுத்தமான காகிதப் பதிப்பு வைகாசி மாதம் வெளிவரும்.

Modern Publicity Company.
மாடர்ன் பப்ளிசிடி கம்பெனி,
15 அரண்மனைக்காரத்தெரு,
(Q. E. X.) சென்னபட்டினம்.

---

## தங்கப்பவுண் அடையாள மிடப்பட்ட கொளுக்கி ஓடுகள்.

இலங்கையில் இதுவே திறமான ஓடாக மதிக்கப்பட்டுவருகிறது. இது மிக உரமானது; நீடித்திருக்கத்தக்கது; அழகானது; எல்லாரும் இதனையே விரும்புகிறார்கள்.

காரணம்:

இந்தச்சாதி ஓடுகளின் விசேஷம் அநுபவத்திற் கண்டது. இந்த ஓட்டை நாங்கள் இங்கே தருவித்தபின் இதனை எல்லாரும் வாங்கி உபயோகிக்கின்றனர். ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள். ஓடுகள் யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எங்கள் பண்டசாலையிலும், பருத்தித்துறையிலுள்ள எங்கள் பண்டசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

S. வீரகத்திப்பிள்ளை,
(Q. 100) தொண்டமானாறு.

---

### சமய சந்தேகம் ஏன்?

இந்தியாவிலும் மற்றுங் கீழைத்தேசங்களிலுமுள்ள அநேகர் உபாதைப்படுகின்றார்கள்.

ஏனெனில் அநேகமான மருந்துகளில் மிருகக்கொழுப்புச் சேர்ந்திருப்பதால் அவர்கள் அதைப் பயங்கரத்தோடு வெறுக்கின்றார்கள்.

மிருகக்கொழுப்புச் சிறிதுஞ் சேராத

## லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

என்னும் மருந்தினால் உண்மையான சுகத்தை யடையலாம்.
இந்துக்களாயினுஞ்சரி மகமதியர்களாயினுஞ்சரி
கிறிஸ்தவர்களாயினுஞ்சரி புத்தர்களாயினுஞ்சரி எல்லோரும் நம்பிக்கையோடு உபயோகிக்கலாம்.

எவ்வித வலிப்பையும் நோவையுந் தீர்ப்பதற்கு இந்தியாவில்கைகண்ட மருந்து.

எல்லாரசாயனசாலைகளிலும் மருந்துக்கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(X. 61.)

# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம் விபவஹு
வைகாசிமீ கஉ திங்கட்கிழமை.


## கள்ளுக் கூட்டம்.

மதுபானம் தங்களுக்கு வேண்டுமென்பாரும் பழையபடி தவறணைகளைத் திறக்க வேண்டுமென்னும் விருப்பமுள்ளவர்களும் இந்த மேமீ 12உ சனிக்கிழமை 3 மணியளவில் யாழ்ப்பாணம் முற்றவெளியில் தவறுதல் வந்து கூடவேண்டுமென்னுங் கருத்தமைந்த ஒரு விளம்பரம் 40 பேரின் நாமங்களுடன் வெளிவந்தலைக்கண்டேம். இவ்விளம்பரத்திற் கள்ளுக்குப் பிரியமானவர்களன்றி மாறுனவர்கள் சமுகஞ்செய்ய வேண்டியதில்லையென்னும் பொருள் படவரையப்பட்டிருந்தமையினுல் மதுபானத்திற்கு மாறுன அபிமானிகள் சென்றால்லரேனவும் குறித்த தினத்திற் கூடிய கூட்டத்தில் சமுகஞ்செய்தோர் சிலரானமையால் அநுகூலமடையவில்லை யேனவும் கேள்விப்படலானேம்

இந்தக் கூட்டத்தவர்கள் நிர்ணயிக்க விரும்பிய நிர்ணயம் ஒன்று என்னவென்றுல் "அரசாட்சியார் தவறணைகள் திறப்பதற்காகச் சம்மதங்கேட்க விடப்பட்டிருக்கும் இடங்கள் அளவிற்கு மிஞ்சியதென்றம் அப்படிச்செய்வதாலுல் உண்மையான சம்மதத்தை அறியச்செய்ய முடியாததாகின்றது" என்பதாம் இதில் இடங்கள் அளவுக்குமிஞ்சியதென்பதும் அப்படிச் செய்வதனுல் உண்மையான சம்மதத்தையறிதல் முடியாதேன்பதும் எமக்குப் புலனுகவில்லை தவறணை திறக்கப்படுதற்கு, குறிக்கப்பட்டிருக்கும் தவறணைக்கு அணித்தாக இருக்கும் குடியினருட் சிலரை மாத்திரங் கேட்டால் உண்மையான சம்மதத்தைப் பெறலாகுமென்பது இந்த நாலைந்துபேருடைய நோக்கம்போலும், குறித்த விளம்பரத்திலுள்ள பிரதானமான கேள்வியொன்று என்னவென்றுல் "தவறணைகள் எடுபட்டதனுல் விளைந்தலாபமுமென்ன" என்பதாம் அடுத்தகேள்வி குடிவகைகள் நம் நாட்டைவிட்டகன்றனவோ" என்பது.

யாழ்ப்பாணத்திலுள்ள தவறணைகளெல்லாந்தவிர்க்கப்பெற்றபின் இந்நாடு அடைந்த நன்மைகளை இப்பத்திரிகையிற் பன்முறை யெடுத்துக்காட்டியுள்ளோம் நித்திரையாகக் கிடப்பவனை எழுப்ப முடியுமேயல்லாமல் நித்திரைபோற் கிடப்பவனை யெழுப்புதல் முடியாதவாறு, மதுபான நீக்கத்தால் நேர்ந்த நன்மைகளை உண்மையாக விளங்காதவர்கட்கு விளக்கித் தேருட்டலாகும்; அறிந்தும் அறியார் போல் நடிப்பவர்களை யார்தான் தேருட்டவல்லார்.

இனி, "குடிவகைகள் நம்நாட்டைவிட்டகன்றனவோ" என்ற கேள்விக்கு, குடிவகைகள் இவர்களை விட்டகன்றுலும் இவர்கள் குடிவகைகளை விட்டகலமாட்டாராயின் அது அகல்வதெங்ஙனம்? தவறணைகளை ஒழித்தமையினுல் குடிவகை இப்பொழுது நாட்டைவிட்டகலாவிடினும் காலகதியில் இக்குடியர் தொலைந்துவிட முற்றுயில்லாமற் போய்விடுமென்பதே அபிமானிகளின் அபிப்பிராயம். கால் ரூபாவிற்கு விற்கப்படும் மது இப்பொழுது தண்ணீர் கலக்கப்பட்டு நான்கு மடங்கு (அதாவது ஒரு;ரூபா) விலை எற்பட்டுச் சோரத்தனமாய் விற்கப்படுகின்றதென இக்கூட்டத்தவர்கள் மன வருத்தப்படுகின்றூர்கள் சோரத்தனமாக வாங்குபவர்களிருப்பதினுல் தண்ணீர் கலந்த விஷமெக்கே வெளியிட்டுச் சொல்ல முடியாமலிருக்கலாம்; கள்ளு இப்படி விற்கப்படுகின்றதாகும் மேலும் தண்ணீர் கள்ளைப்போற் பலரால் வெறுக்கப்படாமையாலும் கள்ளுக்குள்ள தீயகுணம் தண்ணீருக்கில்லையாதலாலும் கள்ளின் தீயகுணமாகிய வெறியைத் தண்ணீர் குறைத்து விடுதலாலும் தண்ணீர் கலந்த கள்ளுக்கு, தண்ணீர்கலவாத கள்ளின் விலையைக்காட்டிலும் நான்குமடங்கு அதிகமாகக் கொடுத்தல் நஷ்டமல்லவே.

குறித்த விளம்பரத்திற் காணப்படும் பொலிஸ்காரர்களை நூற்றுக்கு எழுபதுதொகுதி விகிதமானோர் அந்நிய மதத்தினராவர். கொடசிக்காம் போன்ற சில சைவரின் திருநாமமும் குறித்த விளம்பரத்திற் காணப்படுதல் மிகவும் மனவருத்தமான காரியம் சன்னின்பாற்பட்டார்க்கும் வெட்கத்திற்கும் அதிக தூரமென்பர்,

## பதினெண்புராணம்.

(முற்றொடர்.)

7. வாமனபுராணம்: இதுவாமனவதாரங்கொண்ட திருமாலினுற்கூறப்பட்டது. பதினூலாயிரம் கிரந்தங்களையுடையது. தக்கன் யாகம் விஷ்ணுமூர்த்தியின் அவதாரம், திரிவிக்கிரமாவதாரம் மும்மூர்த்திகளின் மகத்துவம், அவர்களின் அருள் திருக்கேதாரத்தின் மான்மியம் வதரிகாச்சிரமமகத்துவம் காமதகனம் உமை திருமணம் கோதாவரி தீர்த்தச் சிறப்பு முதலியவற்றைக் கூறுவது.

8. மற்சபுராணம்:— மற்சாவதாரங்கொண்ட விஷ்ணுமூர்த்தியால் வைவச்சுவதமனுவுக்கு உபதேசிக்கப்பட்டது. பதினூலாயிரம் கிரந்தங்களை யுடையது. இதன்கண் திருமால் மனுவரசனையும் பிறவுயிர்களையும் சலப்பிரளயத்தால் அழியாது காத்தமை, திரிபுரதகனம், சதுர்வேததாற்பரியம், நரசிம்மாவதாரம், பார்வதி திருமணம், தாரகனென்னும் அசுரனுக்குந் தேவர்கட்குமிடையே நிகழ்ந்த யுத்தம் முதலியன கூறப்பட்டுள்ளன.

9. கூர்மபுராணம்:— கூர்மாவதாரத்தில் விஷ்ணுமூர்த்தியால் உபதேசிக்கப்பட்டது; ஆறுயிரங் கிரந்தங்களையுடையது; பூர்வகாண்டம் உத்தரகாண்டம் என இரு காண்டங்களைக் கொண்டது; 97 அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளது; கூர்மாவதாரத்தின் வரலாறும் பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற்ற வரலாறும் பிறவும் இதன்கட் கூறப்பட்டுள்ளன.

10. பிரமாண்டபுராணம்:—பிரமாண்டங்களின் மகிமைகளைக் கூறுவது; பன்னீராயிரங் கிரந்தங்களையுடையது; பிரமாண்டங்களின் மகிமை, மேல்வருங் கற்பங்கள் தோறும் நிகழ்வன, வராகவதம், பஞ்சகிருத்தியங்கள், நரசிங்கத்தின் கர்வபங்கம, பூகோள வியற்கை முதலியவற்றைக் கூறுவது. மேலே சொல்லப்பட்ட பத்துப் புராணங்களும் சிவபுராணங்களாம்.

11. பிரமபுராணம்:— பிரம தேவருக்குரிய இப்புராணம பதினுயிரங் கிரந்தங்களையுடையது; உலகசிருஷ்டி, மன்வந்தரம் சூரிய சந்திர வமிசத் தரசர் வரலாறு முதலியவற்றைக் கூறுவது.

12. பதுமபுராணம்:—இதுவும் பிரமதேவருக்குரியதாம்; பிரமதேவர் சிருஷ்டி நிமித்தம் பதுமத்திற் றேன்றியமை, தீர்த்த விசேடம், ஆலயமகிமை, அண்டத்தினளவு, இலட்சுமி நாராயண மந்திரங்கள், திலீபராசனுக்கும் வசிட்டருக்குமிடையே நிகழ்ந்த சம்பாஷணை முதலியவற்றைக் கூறுவது. ஐம்பத்தையாயிரங் கிரந்தங்களையுடையது.

13. காருடபுராணம்:—இது விஷ்ணுமூர்த்திக் குரியதாம். விஷ்ணுமூர்த்தி கருடனுக்கு உபதேசித்த வரலாறு, உலகசிருஷ்டி, விரத விவரணம், புண்ணியஸ்தலம், பிதிர்பூசை, சாமுத்திரிகாலட்சணம, இரத்தினங்களினியல்பு முதலியவற்றைக் கூறுவது; ஆயிரங் கிரந்தங்களையுடையது.

14. நாரதியபுராணம்:—இது நாரதமுனிவராற் கூறப்பட்டது. இதன்கண் விஷ்ணுதோத்திரம், விஷ்ணு பூசைமுறை, காலநிர்ணயம், துருவ பிரகலாத சரித்திரங்கள், பாவபுண்ணியங்கள் முதலானவை கூறப்பட்டுள்ளன; இருபத்தையாயிரங் கிரந்தங்களைக் கொண்டது.

(வரும்).

## கால நிலை.

தென்றற்காற்றுக் கிரமமாக வீசத்தொடங்கிவிட்டது. ஆனுல் இக்காற்று ஆரம்பமாகும்போது பெய்யும் மழைதானும் இம்முறை பெய்யவில்லையாம்.

## வண்ணார்பண்ணை கதிர்வேலாயுதசுவாமி கோவில் அலங்காரோற்சவம்.

நிகழும் வைகாசிமீ 8உ திங்கட்கிழமை பகல் மேற்படி கோவிலில் விசேஷ அபிஷேகமும் பூஜையும், பின்னர் மகேஸ்வர பூசையும் அன்னதானமும், அடுத்தநாளாகிய செவ்வாய்க்கிழமை பகல் அன்னதானமும், அன்றிரவு திருவிழாவும், புதன்கிழமை பகல் அன்னதானமும் நடைபெறுமென அறியலானேம்.

## மோட்டாரதத்தைக் களவெடுத்தவனுக்கு இரண்டுவருஷச் சிறை.

சென்ற மாசிமீ 9உ இரவு மிஸ்டர் பண்டாரநாயக்க அவர்களின் மோட்டாரதத்தைக் களவெடுத்துப்போன அமிஸ் என்பவனுக்குக் கொழும்பு டிஸ்திறிக்நீதிபதியால் இரண்டுவருஷக் கடுங்காவற் சிறை விதிக்கப்பட்டது.

## வைத்தியக் களஞ்சியம்.

(பரராசசேகரம்)

எழாலை பிரபல ஆயுர்வேத வைத்தியராகிய ஸ்ரீ அ. பொன்னையா அவர்கள் வெளியிட்டுவந்த 'வைத்தியக் களஞ்சிய' மென்னும் மாதவெளியீட்டின் 2-ம் பகுதி வழக்கம்போல் வெளிவராது சிறிது காலதாமதமுற்றமைக்குக் காரணம் அதனை அச்சிடும் இவ்வச்சியந்திரசாலை வருடப்பிறப்புக் கொண்டாட்டத்தின் பொருட்டு விடுதலை செய்யப்பெற்றிருந்தமையும், பழைய அட்சரங்களை நீக்கிப் புதிய அட்சரங்களை நிரைசெய்யவேண்டி வந்தமையுமாகும். குறித்த 2-ம்பகுதி இன்னுஞ் சில தினங்களுள் வெளிவரும்.

## ஒரு நாளையில் ரூபா 1500 அபராதம்.

சென்ற வியாழக்கிழமை யாழ்ப்பாணம் பொலிஸ்கோட்டில் 35 பேர் வரையில் மதுபரிசோதகர்களால் சோரமாகக் கள்ளுச் சேர்த்தார்களெனவும், விற்றூர்களெனவுங் குற்றஞ் சாட்டப்பட்டார்கள். அவர்கள் எல்லாரும் குற்றவாளிகளென ஒப்புக்கொள்ள நீதிபதி எல்லோருக்கும் அபராதம் விதித்தனர். அந்த அபராதத் தொகை ரூபா 1500 ஆகும். 10 பேருக்கு விரோதமாகச் சோரமாகக் கள் விற்றதற்குத் தொடரப்பட்ட வழக்கில் ஒவ்வொருவருக்கும் தனித்தனி ரூபா 100 அபராதம் விதிக்கப்பட்டது. இவர்களில் ஐவர் பெண்களாவர். மேற்படி குற்றமாகவுள்ள இன்னொரு வழக்கில் 7 பேர் குற்றஞ்சாட்டப்பட்டார்கள். இதில் 6 பேருக்கு ஒவ்வொருவருக்கு ரூபா 100ம், ஒருவருக்கு ரூபா 55ம், கள்ளு வைத்திருந்தவர்களுக்கும் கள்ளுச் சேர்த்தவர்களுக்கும் ரூபா 12-50 தொடக்கம் ரூபா 15 வரையும் அபராதம் விதிக்கப்பட்டது.

## திருநெல்வேலி ஸ்ரீகாபாரோகணேஸ்வரசுவாமி கோவில் மகோற்சவம்.

திருநெல்வேலி ஸ்ரீசீலாயதாக்ஷி அம்பாள் சமேத ஸ்ரீகாயாரோகணேஸ்வரசுவாமி ஆலயத்தில் நிகழும் விபவஹு சித்திரைமீ உஅஉ வியாழக்கிழமை துவசரோகணமாகி அன்று தொடக்கம் உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. வைகாசிமீ சஉ வியாழக்கிழமை இரவு சப்பரோற்சவமும், ருஉ ரதோற்சவமும், கூஉ தீர்த்தோற்சவமும் துவஜ அவரோகணமும், எஉ சண்டிகேஸ்வர உற்சவமும், அஉ திருக்கல்யாணமகோற்சவமும் நடைபெறுமென அறியலானேம். இதுகாறும் மகோற்சவ மின்றியிருந்த இவ்வாலயத்தில் அதைத் தொடக்கி வைக்கத்தோடு நடத்தும் பிரம்மஸ்ரீ சி. சபாபதிக்குருக்களவர்களின் சமயாபிமானம் மெச்சற்பாலது. ஆனுல் இவ்வியாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய சிவாலயங்களில் தாசியர் நடனம் தவிர்க்கப்பட்டிருக்க, இந்தச் சிவாலயத்தில் மாத்திரம் தாசியர் நடனத்திற்கு இடங்கொடுத்தல் வருந்தத் தக்கது.

## அபின் கண்டுபிடிக்கப்பட்டது.

இலங்கைக்குக் கள்ளமாக அபினைக் கொண்டு வருவதற்கு உபயோகிக்கும் சூழ்ச்சியான வழிகளைக் கண்டுபிடித்துத் தடுத்தற்கு ரேகிலுள்ள உத்தியோகஸ்தர் மிகவும் சாவதானமாயிருக்கிறூர்கள். சென்றகிழமை ரேகில் 6 றூத்தல் அபினைக் கண்டுபிடித்தனர். கொழும்பிலுள்ள யாரோ ஒருவருக்கு 6 கட்டுத் தமிழ்த் துண்டுப் புஸ்தகங்கள் அனுப்பப்பட்டுச் சாமான் கொட்டகையில் கிடந்தன. எவரென்றுலும் அதில் கவனஞ்செலுதகாது போய்விடுவார்கள். இந்திய மருந்துகளைப்பற்றிய துண்டுப்புஸ்தகங்கள் என்பதில் ரேகு உத்தியோகஸ்தர் ஒருவர் சந்தேகங்கொண்டு அவைகளைத் திறக்கும்படி செய்தனர். ஒவ்வொரு கட்டியிலும் ஒரு றூத்தல் கொண்ட அபின் இருந்தது. துண்டுப் புஸ்தகங்களை விலாசக்காரன் வந்து கேட்டபொழுது அவன் பிடிக்கப்பட்டு ரேகு அதிகாரி முன்னிலையில் விடப்பட்டான் அதிகாரி அவனுக்கு ரூபா 500 அபராதம் விதித்தனர்.

## குழந்தை உயிருடன் புதைக்கப்பட்டமை.

கெயிக்கவலாவுக்குச் சமீபமான ஒவெலா வென்னும் கிராமத்தில் ஒரு கிராமவாசி தோட்டத்திற்குப் போய்க்கொண்டிருந்தபொழுது ஒரு கூட்டங் காகங்கள் குப்பைகுவியலில் கிளறிக்கொண்டிருப்பதைக் கண்டு அவ்விடஞ் சென்று பார்த்தபொழுது அக்குப்பைக்குள் ஒரு குழந்தை பிறந்தவுடன் புதைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். அக்குழந்தையின் தேகத்திலிருந்து உதிரம் பெருகிக்கொண்டிருந்தது. அந்தக் குழந்தையை எடுத்தபொழுது அது உயிருடன் இருந்ததெனவும் பின்பு இறந்துபோனதெனவுந் தெரிகிறது. பொலிசர் விசாரணை செய்கின்றனர்.

## காட்டில் சந்தனக்கட்டை.

மைசூரிலுள்ள கங்கன்கலி என்னுமிடத்திற்குச் சமீபத்திலுள்ள ஒரு அடர்ந்த காட்டின் மத்தியில் சந்தனமரங்கள் அதிகமாயிருப்பதாகக் கண்டுபிடித்திருக்கின்றனர். 800 தொன் நிறை கொண்டதும் 6 லட்ச ரூபாய் பெறக்கூடியவையுமான சந்தனக்கட்டைகள் எடுக்கலாமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

## யப்பானிய ஆகாயவிமானிகள்.

அரக்கி, மற்றூய் என்னுமிரு ஜப்பானிய ஆகாயவிமானிகள் உலகத்தைச் சுற்றி எதிர்முகமாகப் பறந்து செல்வதற்குப் புறப்பட்டிருக்கிறூர்கள். இந்த இருவரும் எப்பிரல்மீ 26உ சாயந்தரம் ஆகாயத்தில் பேர்லின் நகரத்திற்கும் லண்டன் நகரத்திற்கும் இடையில் ஒருவரையொருவர் சந்தித்திருக்கவேண்டுமெனக் கருதப்படுகிறது.

## தானே பாடும் யாழ்.

பிரான்சுதேசத்திலுள்ள இரண்டு என்சினியர்கள் எந்தப் பாட்டையானுலும் பாடுஞ் சக்தியுடைய நூதனமான ஒரு யாழைச் செய்திருக்கிறூர்கள். அதைச் செய்து முடித்தற்குப் பதினெட்டுவருஷ காலம் அவர்கள் பிரயாசப்பட்டனர் எனத் தெரிகிறது. மின்சாரசக்தியின் உதவியைக்கொண்டு யாழின் கோல் முன்னுக்கும் பின்னுக்குஞ் செல்லுமாம். எல்லோரும் அந்த அதிசயமான யாழைப் பார்ப்பதற்கு ஆவற்படுகின்றனர்.

## நீதிபதிக்கும் நியாயவாதிக்கும் விவாதம்.

பம்பாய் கிறிமினல் விசாரணை உயர்தர நீதிமன்றத்தில் தேவ் என்னும் பொலிஸ்காரனை யடித்த வழக்கு விளங்கப்பட்டபொழுது நீதிபதி பேக்கர் நியாயவாதியாகும் மிஸ்டர் ஜின்னுவை நோக்கி, நீர் சாமானிய நீதிபதியோடு பேசவில்லையென்று ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டுமெனவும், உமது வழக்குக்குச் சார்பாக ஒன்றையும் நீர் குறிப்பிடாது நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தீரெனவும் கூறினர். மிஸ்டர் ஜின்னு நீதிபதியை நோக்கி, நீதிபதி ஒரு சாமானிய நியாயவாதியோடு பேசவில்லையெனவும், நீதிபதி நேரங் கொடுத்திருந்தால் நீதிபதி எண்ணியபடி தாம் செய்திருக்கிருப்பதாகவும் கூறினர்.

## சிவஞானபோதம்.

உண்மைச் சைவ நெறியுடையார் சைவ சித்தாந்த சாஸ்திரத்தை நன்கு ஆராய்ந்து உணர்ந்து ஒழுகுபவர்களென்றே நன்கு துணியப்படும். நஞ்சைவத் தமிழ் மக்களுக்குட் பெரும்பாலார் சைவசமய அனுஷ்டானமுடையவர்களாயிருந்த போதிலும் சைவ சித்தாந்த சாஸ்திர உணர்வு உடையார் சிலரே. அவர்களுள்ளும் சைவ சித்தாந்த சாஸ்திரங்களை ஒதியுணர்ந்துள்ளார் மிகச் சிலரேயாவரென்று துணிந்து கூறலாம். சைவசித்தாந்த சாஸ்திரங்களுட் டலைமையாயுள்ள இச்சிவஞானபோதம், சைவச் சந்தான குரவர்களில் முதல்வரான மெய்கண்ட தேவரினுல் சூத்திரங்களாக ஆக்கப்பட்டுள்ளது. மொத்தம் பன்னிரண்டு சூத்திரங்களை யுடைத்தாகிய இச்சிவஞானபோதத்திற்குச் சிவஞான முனிவர், ஓர் சிற்றுரையும், திராவிட மஹாபாடியமென வழங்கும் ஓர் பேருரையும் உண்டாக்கி வைத்தனர்.

இச்சிவஞான போதத்திற் பொதிந்துள்ள இலக்கண, தருக்க நுணுக்கங்களை விரித்துரைக்கின், எமது அறிவும் காலமும் போதாதென்றே கூறவேண்டும். அப்படி விரித்துரைத்தாரின் உரைகளை வாசித்து அறிதற்கே ஆற்றலற்றார் அநேகர் உளர்.

இச்சிவஞானபோதம் சைவ சன்மக்களுக்குச் சிறப்பாகவும், உலகத்தாருக்குப் பொதுவாகவும் பயன்படும்படி தென் இந்தியாவிலே அம்பாசமுத்திரத்திலேயுள்ள, ஸ்ரீ வீ. பி. காந்திமதிநாதபிள்ளை யென்பார் மிகத் தெளிவான வசனநடையில் விளக்கியுள்ளார். இவ்விளக்கத்தை

யிலே கோட்டாசாரகப் பத்திரிகை வெளிவிடும்படி, சம்பந்தோர் விளக்கில்லாவாற் றையங் கருக்குமாறு இருக்கிறதாரு செய்திருச் ரும் யோகமூர்த்தி திருவுளச் சுறிப் [illegible] மையின், இவ்விலக்கப் பத்திரிகை முதல் இடமாகப் பாகம்பாகமாய்ப் பிரசுரம் செய்வதாக தேசம். தகுந்த இதை கடித்த மனம் பண்ணி, பின் திரட்டி வைத்திருக்குமாறு வேண்டிக்கின்றேன்.

ஞானன் திருவடிவாழ்க.

வண்ணை, 12—5—1928. } வை. இராமநாதன்.

---

## சிவஞானபோதம் (முதற்பாகம்)

சூத்திரம்—க.

அவன், அவள், அதுவெனும் அவை,
மூவினைமையின்,
தோற்றியதிதியே யொடுங்கிமலத்துளதாம்,
அந்தம் ஆதி; என்மனார் புலவர்.

முதற் பாடம்:— சுருதிப் பொருள்களை அனுமானப் பிரமாணத்தால் நிர்ணயிக்கவேண்டும்.

உலகப்பொருள்களை மூன்றுவேறுவிதங்களால் அறிகிறோம். நேரிலும் அறிகிறோம், பிறிதொன்றன் மூலமாயும் அறிகிறோம், இவ்விருவிதங்களுமன்றி நூல்களாலும் அறிகிறோம். பொருள்களை நாம் நேரில் அறியும்போது, அவற்றின் தன்மைகளை நாம் அளந்தறிதற்கு உபகாரமாய் நிற்பது, அவ்வவற்றின் பிரத்தியக்ஷரூபமே. இவ்வாறறியுமறிவே பிரத்தியக்ஷப்பிரமாணம் எனப்படும். இப்பிரமாணத்தால் நாம் எல்லாப் பொருள்களையும் அறிய முடியாது. நமக்கு எல்லாப் பொருள்களும் பிரத்தியக்ஷமாதல் இல்லை. பிரத்தியட்சமாகக்கூடிய பொருளையும் வேறு விதத்தால் அறிவதுண்டு. மலையினுள்ள தீயைப் பிரத்தியட்சமாக அறிதல் கூடும். ஆனால் அதனை எப்போதும் பிரத்தியட்சமாக அறிவதில்லை. அம்மலையினின்று கிளம்பி வரும் புகையைக் கண்டே அம்மலையில் தீயுண்டு என்று ஊகித்தறிகிறோம். இனி, பிரத்தியட்சமாகமாட்டாத பொருளையும் இவ்வாறு ஊகித்தறியலாம். அதாவது அதன் தன்மையைப் பிரத்தியட்சமாகும் வேறு பொருளினுதவியால் அளந்து அறியலாம். இவ்வறிவே அனுமானப் பிரமாணம் எனப்படும். இப்பிரமாணத்தால் ஒரு பொருளை நேரில் அறியவில்லை என்றாலும் வேறோர் பொருளில் அறியக்கிடக்கும் ஏதுக்கள் வாயிலாக அப்பொருளை நாம் ஊகித்தறிதற்கு இப்பிரமாணம் உதவும். இவ்வாறு ஊகித்தறிதலுமின்றி இன்னொரு விதத்தாலும் அறிவதுண்டு என்றோம். அதுவே நூல்களால் அறிதல் என்றும் சொன்னோம். ஈண்டுப் பொருள்களை நமக்கு அளந்து அறிவிப்பன நூல்களே. இவற்றுள் கடவுளை உணர்த்தும் நூல் சுருதி அல்லது ஆகமம் என்னும் பேரால் வழங்கப்படும். இவ்வாகமத்தைக் கொண்டறியுமறிவே ஆகமப்பிரமாணம் எனப்படும். ஆகவே பிரமாணங்கள் மூன்று வகையென முடியும். இப்பிரமாணங்களை யுணர்த்தும் நூலே அளவை நூல் எனப்படும். இவற்றுள் சுருதிப்பொருளை நாம் அறிதற்கு உதவியாய் நிற்பது எதுவென்பதை ஆராய்வாம்.

சுருதிகள் கடவுளை யுணர்த்தும் என்றோம். இக்கடவுளை நாம் கண்ணாற் காண முடியாது. காதால் கேட்க முடியாது. வேறெந்த இந்திரியத்தாலும் அறிய முடியாது. இது பிரத்தியட்சப்பொருளன்று. என்றாலும் சுருதிகள் கடவுளின் இயல்புகளைக் கூறுமென்றோம். ஆனால் இச்சுருதிகள் கூறுவதால் மாத்திரம் கடவுள் உண்டென்றேனும் அக்கடவுளின் தன்மை இன்னதென்றேனும் துணிய ஒருப்படோம். இவ்வொருகாரணத்தால் மாத்திரம் நமக்குத் தெளிவுண்டாவதில்லை. அன்றியும் ஆகமப்பிரமாணத்தால் மாத்திரம் கிடைக்குமறிவு கேவலம் நூலறிவு. அதனால் நமக்கு அநுபவ அறிவு கிடைப்பதில்லை. இவ்வநுபவ அறிவே நமக்குப் பயன்தருமறிவு. இவ்வறிவு சிந்தனை செய்து ஆராய்தலினாலே கிடைப்பது. ஆதலால் ஆகமப்பிரமாணத்தால் நமக்குக் கிடைக்கும் அறிவு வேறு பிரமாணத்தாலும் வலியுறுத்தப்படல்வேண்டும். கடவுளைப் பிரத்தியட்சப்பிரமாணத்தால் அறிய முடியாதென்றோம். எனவே ஆகமப்பிரமாணத்தால் நமக்குக் கிடைக்கும் அறிவை வலியுறுத்துவது அநுமானப் பிரமாணம் ஒன்றே. இவ்வநுமானப் பிரமாணத்தினாலேயே கடவுளைப்பற்றிய அநுபவ அறிவு மாத்திரமன்றி, அக்கடவுளை உணருமுகத்தால் உயிர் முதலிய வேறு பொருள்களைப்பற்றிய அநுபவ அறிவும் நமக்கு உண்டாக வேண்டுவது. இவ்வநுபவ அறிவைத்தர எழுந்ததே இச்சிவஞானபோத நூல்.

இப்போதநூல், கடவுள் உண்டென்று இன்ன சுருதி கூறுமென்றாவது, கடவுளின் தன்மை இன்னதென்று இன்ன சுருதி கூறுமென்றாவது நமக்கு உணர்த்தாது; உலகிற் காணப்படும இன்ன ஏதுக்களால் கடவுள் உண்டென்று உணரலாமென்றும், இன்ன ஏதுக்களால் கடவுளின் தன்மை இன்னதென்று உணரலாமென்றும், நமக்குக் குறிப்பாயும் வெளிப்படையாயும் உணர்த்தி, அக்கடவுளைப்பற்றிச் சுருதிகள் கூறும் கருத்துக்களை தெளிவுறுத்தும். சனகாதி நால்வர் இத்தகைய தெளிவு பிறவாது மயங்கினநிலையிலேயே நம்கடவுள் தக்ஷிணாமூர்த்தியாக எழுந்தருளியிருந்து இந்நூலின் கருத்துக்களை உள்ளடக்கிய சின்முத்திரையால் உண்மை உணர்த்தி அருளினர் என்றும், இச்சின்முத்திரையே சிவஞானபோத முத்திரை எனப்படும் என்றும் உண்மைப் புராணங்கள் கூறும். இதுவுமன்றி, இந்நூலொன்றே எல்லாச் சுருதிப்பொருள்களையும் எவ்வகை மயக்கமுமற இனிது விளக்குவதால் இது நந்திபெருமான் வழித்தாய் சனற்குமாராதி சைவாசாரிய பரம்பரையில் பண்டும், இன்றும், என்றும் உபதேசிக்கப்பட்டுவரும். இந்நூல் இவ்வாறு சுருதிப்பொருள்களை அளவை நூலின்படி தெளிவுறுத்துவதை உணர்த்தவே இதன் முதற்சூத்திரம் "என்மனார்புலவர்" என்று முடிவு கூறும். ஈண்டுப் புலவர் என்றது அளவை நூலுணர்ந்தாரையே. இம்முதற்சூத்திரமன்றி ஏனைய ஒவ்வொரு சூத்திரமும் இப்படிச் சுருதிப் பொருளை உணர்த்துவதால் இவ்வாக்கியம் ஒவ்வொரு சூத்திரத்திறுதியிலும் இருப்பதாகக்கொள்ளல்வேண்டும். ..............
......... சிவம், ஞானம், போதம் என்னும் சொற்கள் கூடி (சிவம் எனப்படும்) கடவுளுக்கு உண்டெனச் சுருதிகள் கூறும் (ஞானம்) இயல்புகளைத் (போதம்) தேர்ந்து தெளிதல்; அதாவது அவ்வியல்புகளை அளவை நூலின்படி நிச்சயித்தல் என்பது பொருள். ஆகவே இந்நூலின் ஒவ்வொரு சூத்திரமும சுருதிப் பொருள்களை அளவைநூலின்படி வலியுறுத்தி யுணர்த்த எழுந்ததென்பது பெறப்படும். அவற்றுள் இம்முதற்சூத்திரம் கடவுள் உண்டென்றும், அக்கடவுள் அரனே என்றும் கூறும் சுருதிகளை ஏதுக்கள்கொண்டு வலியுறுத்தும். அவ்வேதுக்களை ஒவ்வொன்றாய் ஆராய்ந்து மேற்செல்வாம். (தொடரும்.)

---

குறிப்பு.

இவ்வரியநூலைக் குரு முன்னிலையிற் கேட்டுணர்தலும் மிகக் கடினமான காரியமாகும். அப்படியிருக்கப் பத்திரிகைமூலமாகப் படித்தல் எப்படி முடியும் என்று நினைப்பாரும் உண்டு. மிகத் தெளியான வசனத்தில் எழுதப்பட்டிருக்கும் இவ்விஷயத்தைக் கிரகித்ததன்பின் குருவினிடம் நிர்க்கமாகப் படித்தறிதல் சுலபமாகவிருக்குமென்பதே எமது துணிபு.

முதற் சூத்திரத்திற்குப் பன்னிரண்டு பாடங்கள் உள்ளன. இன்று பிரசுரமான முதற்பாடம் போக, ஏனைய பதினொரு பாடங்களும் முறையே இப்பத்திரிகையில் அடுத்த சில தினங்களில் வெளிவரும். 'குருவடி வாழ்க'

வை. இ.

---

## என் வரலாறு.

(முற்றொடர்.)

இவர் அநேக பாடசாலைகளுக்கு முகாமைக்காரனும் அச்சமயநூலருள் சிரேஷ்டம்பெற்றவரும், நன்கு கற்றவரும், கிராம நீதிபதியுமான படியால் தீமைசெய்யத் தலைப்படாரென வன்னி, அவர் முகாமையின்கீழ் எவ்வோலிருந்து சைவமுறைப்படி விவாகஞ்செய்த அனேகர் உபாத்தியாயத்தொழில் நடாத்துவதையு மின்னும்பல தருக்கவாறுன நியாயங்களையும், என்னுடன் சபதமிட்ட உபாத்தியாயரின் முகமையுங் கூறினேன். அவர் எவ்விதத்திலும் தம் நண்பரான உபாத்தியார் சொற்படி என்னை வேலையினின்றும் நீக்கும் நோக்குடையார்போற் காணப்பட்டு நீ நல்லூர்க் கந்தசாமி கோவிலுக்குப் போனாயாம், தாலி கட்டினாயாமென்னும் பொலி நியாயங்களைக் கூறி வேலை செய்யாதிருக்க ஒரு மாதச் சம்பளமுந் தந்து வேலையினின்றுமென்னை நீக்கினர். சில காலமாக யான் வேலையின்றியிருக்க நேர்ந்ததால் நம் வறுமை சகிக்கவாற்றாது வடஇலங்கைச் சைவவித்தியாவிர்த்திச்சங்கத் தலைவரிடம் சென்றுவேலைதரும்படி கேட்டேன். அதுவுமன்றி எனது வரலாறனைத்தையும் அவர்க்குக் கூறினேன். உடனே அவர் என்மீது பரிவு கூர்ந்து கூடிய சீக்கிரத்தில் வேலைதருவதாகப் பதிலளித்தனர்.

அவ்விதமே அவர்கள் முகாமையின்கீழுள்ள பாடசாலையொன்றி லமர்த்தேன். அப்பாடசாலைக் கருகாமையிலேயே யான் முன் னெழுதிய முகாமைக்காரனின் பாடசாலையொன் றிருந்தது. அதுவும் அவர்கள் ஆலயத்தையடுத்த பாடசாலையாகவிருந்தது. என் காரணம்பற்றியோ தெரியாது யான் சைவ வித்தியாவிர்த்திச் சங்கத்தவர் பாடசாலையி லமர்ந்த பின் நின்றால் அம்மிஷன்பாடசாலையும் சைவப் பாடசாலையாக்கப்பட்டிருக்கின்றது. அப்பாடசாலையில் இப்பொழுது முதல் உபாத்தியாயராயிருப்பவர் என்னைப்போல விவாகவிஷயமாய் முரண்பட்டுச் சபதஞ்செய்து என்னை வேலையினின்றும் நீக்கிவித்தவரேயாவர். இவர் குறித்த இலைத்தன்ற பாடசாலையிற் சைவாசார முறைப்படியே நின்றார். இப்போதும் அவரே அப்பாடசாலையிலிருக்கின்றார். யான் அரசாட்சி முறைப்படி விவாகஞ்செய்யச் சைவ விவாகஞ் செய்தாயென்று வேலையினின்றும் நீக்கிய முகாமைக்காரன் சைவ முறைப்படி நடக்கும் அந்த உபாத்தியாயரை வேலையினின்றும் நீக்காதிருக்கும் காரணமென்னெ? "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற், கோடாமை சான்றோர்க்கணி" என்று செந்நாப்போதாரும் கூறியிருக்கின்றாரே. இதுகாலவரையில் அவர்கள் ஆலயத்தையடுத்த பாடசாலைகளுள் சைவ பாடசாலையாக வந்தது இப்பாடசாலையேயாகும்.

கடித.

---

## திருவாலங் காட்டுத் தேர்த்திருப்பணி.

விபவஷு சித்திரைமீ 11ல் இத்தேர்த்திருப்பணி சதுரப்பட்டடை வரையில் பூட்டி ஆரம்பித்த சித்திரவேலைகள் அமைந்து பூர்த்தியாயின. பட்டடைவேலை அழகாகவும் பெலனாகவும் இருப்புவேலைகள் ஆதனமாகவும் செய்யப்பட்டிருக்கின்றன. சதுரப்பட்டடையிலமைந்த உருவங்கள்:—முன்வரிசையில் ஊர்த்துவ நடராஜமூர்த்தி, சமிசேனம்பாள், விநாயகர், பாலசுப்பிரமணியர், முஞ்சிகேஸ்வரர், கார்க்கோடகர், துவாரபாலகர்களும்; பின்வரிசையில் காளியம்மை, வடாரண்யேஸ்வரர், வண்டார்குழலியம்மை, பிரமா, விஷ்ணு, நாரதர், மிருதசர்த்தி, துவாரபாலகர்களும்; பக்க வரிசையில் ஓர் பக்கம் அகோரவீரபத்திரர், தக்கன் யாகம், விஷ்ணு, லக்ஷ்மி, சரஸ்வதி, திருவெண்காடர், நீலகண்டசிவாசாரியர், பராசரர், மோகினிகளும்; மறுபுறம் ஆனந்த நடராஜமூர்த்தி, சிவகாமியம்மை, பதஞ்சலி வியாக்கிரபாதர், திருஞானசம்பந்தசுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், சண்முகமூர்த்தி, அருணகிரிநாதர், பிருங்கி, காரைக்காலம்மை; சுப்பிரமணியர் லீலைகள், அஷ்டநாகங்கள், விமானவரிசைகளாகும். இவை மிக அழகாகவும் ஆதனமாகவும இருக்கின்றன. அநேக ஜனங்கள் ரதத்தின் வேலைகளைப் பார்த்து மகிழ்ச்சி செல்கிறார்கள். வருகிற ஆவணி மாதத்திற்கு முன் விஸ்தாரப்பார் பரியந்தம் உள்ள வேலைகளைப் பூர்த்தி செய்து விடவேண்டுமென்னும் எண்ணத்தோடு வேலை நடந்துவருகிறது.

அன்பர்கள் எல்லோரும் தங்கள் தங்களாலியன்ற உதவி புரிந்து இத்திருப்பணியை இனிது முற்றுவிப்பார்களென்று வடாரணியேஸ்வரப்பெருமான் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
சச்சிதானந்தராஜயோகி,

திருவாலங்காடு(போஸ்ட்)
7—5—28.

---

## சபர்மதி ஆச்சிரமத்தில் நிகழ்ந்த ஓர்சம்பவம்.

—:0:—

மகாத்மாகாந்தி "யங் இந்தியா" என்னும் பத்திரிகையில் எழுதிய விஷயத்தின் சாரம் பின்வருமாறு:—

ஸ்ரீ ஜோஷி என்பவர், சபர்மதியிலுள்ள சத்தியாக்கிரக ஆச்சிரமத்தை நடத்தும் சங்கத்தின் காரியதரிசியாகும். ஏறக்குறைய பதினைந்து நாட்களுக்கு முன் நிதியினால் வழக்கொன்றில் சாட்சி சொல்லும்படி நீதிபதியால் ஒரு கட்டளை அவருக்கு அனுப்பப்பட்டது. அந்தக்கட்டளையை அவருக்குக் கொடுக்கும்படி கொண்டுவந்த பொலிஸ்காரன் சாவதானமின்றி நடந்துகொண்டனன். ஸ்ரீ ஜோஷியை உரத்த சத்தமாகக் கூப்பிட்டுக்கொண்டு வந்தனன். எனக்கிது காதில் விழுந்ததும் ஸ்ரீ ஜோஷியை அவனுக்குக் காட்டினேன். கட்டளையை அவன் அவருக்குக் கொடுத்தபொழுது ஸ்ரீஜோஷி தாம் அதைவாசிக்கும்வரையில் அவனை நிற்கும்படி கூறினர். ஆனால் அவன் "இஷ்டமானால் எடும்" என்று கூறிவிட்டுப் போய்விட்டான். ஸ்ரீ ஜோஷி கட்டளையை எனக்கு வாசித்துக் காட்டினர். யாதொரு நிதியின்வழக்கைப்பற்றியும் ஒன்றும் தெரியாதவர்போற் காணப்பட்டார். அப்பொழுது என்ன செய்வதென்பது அவருக்குத்தெரியவில்லை. அவருக்கு நேரமுமில்லை. புகைரதப்பிரயாணத்திற்கும் செலவு அவரிடத்திலில்லை. அங்கத்தவர் தமக்குள்ள எல்லாவற்றையும் ஆச்சிரமத்திற்கே அர்ப்பணஞ்செய்து விடுகிறபடியால் அவரது நேரமும் பணமும் ஆச்சிரமத்திற்கே உரியதாயிருந்தது. ஆச்சிரமத்திலிருக்கும்பணம் ஏழைகளுடைய பொதுப்பணமாயிருந்தது. கட்டளைக்கு அமைந்து நடக்க அப்பணம் உபயோகிக்கக்கூடாதிருந்தது. பொலிஸ்காரனும் கட்டளை எதற்கென்பதை அவருக்கு விளக்கவுமில்லை, அல்லது கோர்ட்டுக்குப் போகத் தக்கதாகப் புகைரதச் செலவையாவது அவருக்குக் கொடுக்கவுமில்லை. அகமெடபாட் என்னுமிடத்திலிருந்து கொஞ்ச மைல்கள் தூரத்தில் ஒரு புகைரதஸ்தானத்திற்குச் சமீபத்தில் இந்த வழக்கு நடக்கும் கோடு இருந்தது. பணமில்லாமையால் ஸ்ரீ ஜோஷி கோட்டுக்குப் போகாதென்று சமயமிருந்தும் பெறுபேறுகளுக்கு ஆளாவேனெனத் தீர்மானித்தனர். அல்லாவிட்டால், தாமாகத் தேடிக்கொண்ட வறுமையின் உபயோகமுமில்லை. அப்படி நடந்துகொள்ளாவிட்டால் வறியோர்க்கு உதவி செய்தவராகவுமாட்டார். கட்டளைக்கு அமையாததை, நீதிபதி நீதிஸ்தலத்தை அவமதித்ததாகுமெனக் கூறி ஸ்ரீ ஜோஷியைப்பிடித்துவரும்படி வாரண்டு அனுப்பினர்; வாரண்டுகொண்டு அவரைப் பிடிக்கவந்தவன் வேண்டிய நிதியின் அவர் கோட்டுக்குப்போக வாக்குச்செய்தால் பிடிக்கமாட்டேனெனக் கூறினன். அதற்கு அவர் தமக்குப் புகைரதப்பிரயாணச செலவைக் கொடுத்தால் தாம் கோட்டுக்கு வருவதற்கு வாக்குச்செய்வதாகக் கூறினர்.

ஸ்ரீஜோஷியைப் பிடித்துச் செல்லவந்தவனுக்கு அவருக்குப் புகைரதச்செலவைக் கொடுக்க அதிகாரமில்லை. ஆகையால் அவரை அகமெடபாட்டிலுள்ள நீதிபதி முன்னிலையில் கொண்டுபோய்விட்டனன். நீதிபதிக்கு அவ்வழக்கை விசாரிக்கச் சாவகாசமில்லாதிருந்தது. ஸ்ரீ ஜோஷி தாம் கட்டளைக்கு அமைய முடியாதிருந்ததைப்பற்றி விளங்கப்படுத்தினர். நீதிபதி வழக்கம்போல, தம்மால் ஒன்றும் செய்ய முடியாதெனவும், அவரைப் பிணையில்விட முடியுமெனவும், வேண்டுமானால் பின்பு அந்த விஷயத்தைப்பற்றி வாதிக்கும்படியும் கூறினர். புகைரதச் செலவைப் பெறுமல் ஸ்ரீ ஜோஷி பிணைகொடுக்க ஆயத்தமுள்ளவராயிருந்தால் முன்னரே அக் கட்டளைக்கு அமைந்துபோயிருக்கக்கூடாதா. பொலிஸ்தானத்துக்கு அவரைக் கொண்டுபோகும்படி உத்தரவு செய்தபொழுது வெயில் அகோரமாயிருந்தது. பொலிஸ்தானத்திற்கு நடந்துசெல்ல அவர் மறுத்தார். அப்பொழுது பொலிஸ்காரன் ஓர் வண்டியைக் கூலிக்கு அமர்த்த வேண்டியவனாயிருந்தான். உடனே பொலிஸ்காரனுடன் ஸ்ரீஜோஷியை தாலொட் என்னுமிடத்திற்குக் கொண்டுபோய் நீதிபதி முன்னிலையில் விட்டனர். இவரைக் கண்டவுடன் தமது பிழையை நினைந்து அவருக்குப் புகைரதச் செலவையும் கொடுத்து அவரின் உறுதிமொழியைக் கேட்டபின் அவரை விடுதலைசெய்தனர். தைரியமான இந்தச் செய்கை தாலொட் என்னுமிடத்திலுள்ளவர்களுக்கு நயம்பயப்பதாகவிருந்தது. அதினாலே அவர்கள் அதிக சந்தோஷமடைந்தனர். தாமாகவே வறுமைக்காளானோர் இவ்வண்ணம் செய்வதினால் ஏழைகளுக்குச் செய்யும் அநீதிகளை இலகுவில் களைந்துவிடலாம். நீதிபதியின் எண்ணமற்ற செய்கை அதிசயிக்கத் தக்கது. போதியளவு விசாரணையின்றிக் கட்டளையை யனுப்பிவிட்டார். அவ்வண்ணம் செய்தாலும் கட்டளைபெறுபவன் அதற்கு அமைந்து நடப்பதற்கு வேண்டியிருந்ததைக் கணிச் செய்யவுமில்லை. ஒரு சாட்சிக்காரனுக்கு அவனுடைய செலவை முன்னரே கொடுப்பது வழக்கமில்லையென அறிந்தேன். அது அப்படியானல் ஏழைகளுக்கு அது கஷ்டமான காரியம். இந்த வழக்கில் வாரண்டை அனுப்பியது அவர் நீதியினல் வழக்குகளில் எவ்வளவு சாக்கிரதையாயிருக்கிறாரென்பதைக் காட்டுகிறது.

கட்டளை சரியாகக் கொடுக்கப்பட்டதைப்பற்றிய அத்தாட்சி அவரிடமில்லை. ஸ்ரீ ஜோஷிக்குக் கட்டளை கொடுக்கப்பட்டதோ வென அவர் விசாரிக்க விரும்பவில்லை. நீதியைச் செலுத்தவிருக்கும் அரசினருடைய இந்தப் பகுதியில் எவ்வளவு அநீதி மறைந்திருக்குமென்பதை யோசித்துப் பார்க்கலாம். இந்த ஸ்ரீ ஜோஷி ஒரிசாமாகாணத்தின் ஏழையாயிருந்திருந்தால் தாலொட் என்னுமிடத்தில் என்ன சம்பவித்திருக்குமெனச் சொல்லுதல் கஷ்டம். இந்த ஏழை, நீதிபதியால் எவ்வளவு தூரம் நிந்திக்கப்பட்டும் அதட்டப்பட்டும் இருப்பான். இந்த ஏழைகளை இவ்வண்ணம் நடத்துவதற்கு அரசினர் உத்தரவாதியாயிருந்தபொழுதிலும் இப்படி நடத்தும் இந்திய உத்தியோகஸ்தர் ஒரு சாட்டும் சொல்ல முடியாதென்றே எண்ணத்தக்கதாயிருக்கிறது. இந்திய உத்தியோகஸ்தர் இவைகளைத் திருத்தி நடத்தாவிட்டால் தாமாகவே வறுமைபூண்டோர் சத்தியாக்கிரக மூலம் இதைத் திருத்துதல் வேண்டும்.

---

## சைவசமயமும் கொல்லாவிரதமும்.

(முற்றொடர்).

வேத சாஸ்திரங்கள்.

இத்தகைய வீடுபேற்றை யளிக்க வல்ல [illegible] களைக் காட்டக்கூடியது எதுவோ அ[illegible] தான் வேதம், மார்க்கம், மறை, சமயம் [illegible] பல பெயர்கொண் டழைக்கப்படு[illegible] இங்ஙனமே உலகத்தில் ஒன்றி[illegible] அநேக சமயங்க ளிருக்கின்றன. அ[illegible] வொரு சமயமும் கடவுள் ஒருவருண்[illegible] பதை அங்கீகரிக்கின்றது. அவரவர் செ[illegible] வினைக்கிடான பாவ புண்ணியமும் சாக[illegible] மு முண்டென்று ஒப்புக்கொள்ளுகின்றது[illegible] ஆனல், கடவுள் லக்ஷணம் எத்தகைய தென்பதை விசாரிக்கும்பொழுது முரண்பட்டதான குறிப்புகளைக் காட்டி வீண் விதண்டாவாதத்தையும் கிளப்பி, மனமயக்கத்தைக் கொடுக்கின்றது. சைவசமயமோ அங்ஙனமின்றிச் சுருதி யுக்தி அனுபவங்கட்கும் பொருந்தும்படி கடவுள், ஒன்றியும் தாக்கற்று எங்கு மொரேபடித்தாய் முட்டத் ததும்பி யிருப்பதாகக் கூறுகின்றது. கட்புலனுக்குச் சராசரமாய், நாநாபேத வடிவங்களாய்க் காணப்படுகின்ற இப்பிரபஞ்ச முழுதுமே சிவஸ்வரூபமென்று சொல்லப்படுகிறது.

"எப்பொருள்களுந் தானுகி விளக்கிடப் படுமா லிச", னப்படி விளங்குகின்ற தற்றலே பரன் றனக்கு, மெய்ப்படு புகை யெரிற் செயலினு ளன்று மெய்யே, யிப்படி ஞானத்தன்று விறைஞ்சிடப்படுவோ னீசன். (ஞானாந்தநிரட்டு)

எனவும்,

"பார்த்த விடமெல்லாம் பரமன்கா" னம்மானே, பாராம லின்றும் பாழ்பட்டே னம்மானே. (திருவம்மானை)

எனவும்,

"எங்குஞ் சிவமொழிய" வில்லை யகன்றன்ஞானே, அங்கச நிரஞ்சுவி யாணவமாய்—பொங்குமிருள், மைசெய்த மாமாயை மாய வினை மற்றனைத்தும், பொய்பொய் பொய் பொய்பொய் பொய் போம். (சிவானந்தமாலை)

எனவும்,

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புலனுய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்று, உலகே ழெனத் திசைபத் தெனத் தானொருவனுமே, பலவாகி நின்றவா" தோணோக்க மாடாமோ. (திருவாசகம்)

எனவும்,

"எட்டுத் திசையும் பதினுறு கோணமு மொன்றுமொன்ற, முட்டத் ததும்பி முளைத் தோங்குஞ் சோதி"யை மூடரெல்லாம், கட்டிச் சுருட்டித் தங்கக்கத்தில் வைப்பார் கருத்தில் வையார், பட்டப் பகல்வெளியை யிருளென்று கூறிடும் பாதகரே. (பட்டினத்தடிகள்)

எனவும்,

"அங்கிங்கெனுதபடி யெங்கும்பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி........" (தாயுமானவர்)

எனவும்,

"எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகு
மிலங்கு முயிருடலனைத்து மீசன் கோயில்
......................" (சிவஞானதீபம்)

எனவும் வரும் இதுபோன்ற அநேக பிரமாணங்களால் அவரே இப்பிரபஞ்சமாகவும், இப்பிரபஞ்சமே அவராகவும் ஆடியசைந்துகொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. மற்றுஞ் சமயசாத்திரங்களால் இதுபோன்ற ஆதாரங் காட்ட முடியாதாகும். ஆனல் எல்லாச் சமயங்களினதும் ஒப்பக்கூடியதுஞ் சுருக்கமாயதுமான கொள்கை எதுவென்றல்,

"புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தவினை, மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்—எண்ணுங்கா, லீதொழிய வேறில்லை எச்சமயத்தோர் சொல்லும், தீதொழிய நன்மை செயல்". (ஒளவையார்)

எனவருமிவற்ருல் பாவமாகியவற்றைத் தள்ளுவதும், புண்ணியமாகியவற்றைக் கொள்ளுவதும் நமது பாவங்கள் தேய்வதற்கு இலகுவான வழியாம். நமக்குப் பாவமென்பது எவ்வகையாய் வந்தது? நாம் முன்சென்மத்தில் நல்வினை, தீவினை செய்யாதிருப்போமானுல், அதன் பலனுகிய சுகதுக்கங்கள் இச்சென்மத்தில் வந்தடையக் காரணமில்லை. இதேபோல் நமக்கு, மறுசென்மமு மில்லையென்று கண்டால், இம்மையில் செய்யப்படும் எத்தகைய பழிபாவங்களுக்கும் அஞ்சவேண்டியதில்லை. நாம், இப்பொழுது அநுபவிக்குஞ் சுகதுக்கங்களனைவை பிராரத்தவசத்தால் கிடைத்தனவாகும். இப்பிராரத்த சுகதுக்கங்களை அநுபவித்துக்கொண்டு செய்யப்படுங் கன்மங்களே "ஆகாமியம்" எனப்படும். இதுவே மறுமைக்கு வித்தாய் நின்று சுகதுக்காதிகளைக் கொடுப்பது.

"எத்திறவேதவாக்கோ மெய்யியுமறுடத்தேச, மத்திறமாராஞர்த்தமறிவதற்கேதுவாக, வொத்தவாண்மைமையடைந்த முண்மையா முத்தி சேர, வெத்தனஞ் செய்யாதுடனென்றுமான் மானைக்கொன்றேன்" (விவேகசூடாமணி.)

என வருவனவற்ருல் எவ்வித காரணத்தாலோ இம்மானுட சென்மங் கிடைக்கப்பெற்றும், அதோடு வேதசாத்திரங்களை யாராய்ந்து அதன் இரகசியார்த்தங்களைக் கிரகித்தற்கான பகுத்தறிவைப் பெற்றிருந்தும், சாதல், பிறத்தல், சுகதுக்காதிகளைப் புசித்தல் ஆகிய இத்துன்பத்தினின்றும் நீங்கி நித்தியமாம் மோக்ஷத்தை யடைதற்கான யத்தனங்களைச் செய்யாதிருப்போமானுல், பின்னும் மனேக சென்மங்களிற் கிடந்துழல வேண்டியதாகவே முடியும். ஆகையால்,

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்".

"அறவாழி யந்தணன் றுள்சேர்ந்தார்க்கல்லாற்
பிறவாழி நீந்த லரிது". (திருவள்ளுவர்)

[illegible] வரும் ஆன்றோர் வாக்கின்படி இறைவ[illegible] திருவருட்செல்வ பாதங்களையே சரணுகதி [illegible] நம்பி இடைவிடாத மெய்யன்போடு [illegible] வணங்கி இன்புறுவதே இப்பிறவித் [illegible] மாற்றுதற்குரிய வழியாமன்றி, [illegible] எவ்வகையாலும் முடியாதாகும்.

[illegible] பஞ்சத்தோடொட்டி இல்லறம் நடாத்[illegible] பிரசைகள் ஒரு கணப்பொழுதாயினும் [illegible]மனதை யடக்கி, தவமா தியானஞ் செய்ய முடியாதவர்களாய்க் குடும்பகாரியங்களிலேயே கவனஞ்செலுத்திக் காலங் கழிக்கின்றர்கள். இத்தகையோர் வருடத்திலோ, மாதத்திலோ, வாரத்திலோ வரும் சில முக்கிய தினங்களையாவது விரததினங்களாகக் கொண்டு உண்டியை வெறுத்தல் குறைத்தல் பட்டினி கிடத்தல் மனதைப் பலவழி செல்லாதடக்கிக் கருணைக் கடலா மிறைவன் திருவருளைப் பெறட்டுமென்ற நன்னோக்கம் பற்றியே பிரதான விரதநாட்கள் நியமிக்கப்பட்டனவாம். (வரும்)

கா. க. தனபாலன்,
மானிப்பாய்.

## திருவிழா முடிவில் தீர்த்தங் கொடுப்பதற்கு நியாயம்.

—::—

துவசஸ்தம்பமாகிய கொடிமரம் பதி நந்தியாகிய பசு ஆன்மா பாசத்தோடு கூடிப் பந்திக்கப்பட்டிருந்தலால், திரோதான சத்தி ஆன்மாவைத் தன்னிடந் தடக்கித் தான் மேம்பட்டு ஐந்தொழில் செய்து ஆன்மாவைப் பதியிற் சேர்த்தலாகிய கிரியை இது என்பதை விளக்குதலாம். கொடிமரம் பலிபீடம் நந்தி என்னும் மூன்றும் ஒரிடத்திருந்தலும் பதிபசுபாசம் என்னும் மூன்றனையும் காட்டுதலாம்.

உற்சவகாலத்திலே தம்பம் பலிபீடம் நந்தி இம்மூன்றிடத்தும் இரட்சாபந்தனந் [காப்புக் கட்டுதல்] செய்தல் அம்மூன்றுந் தொழிற்படுதலைக் காட்டுதற்காம். அஸ்திர தேவராகிய சூலம் வாயிலாகப் பலிபீடத்தில் பலியிடுதல் பாசம் வலிதுன்றும்படி அப்பாசத்துக்குக் கன்மத்தை யூட்டுதலாம். பாசதுணம் யானைதேன்றுந் செருக்கு. கன்மப்பயனுகிய துன்பானுபவம் அச்செருக்கினை யொழிக்கும். ஆதலால், அக்கன்மானுபவம் பாசத்திற்கேயன்றிப் பசுவுக்கின்மையால் பாசமாகிய பலிபீடத்தில் பலியிடப்படுகின்றது இதுவன்றி அஸ்திரதேவர் மூலமாக எட்டுத் திக்குகளிலுமுள்ள எல்லா உலகத்தும் பஞ்சகிருத்திய வாயிலாகக் கன்மத்தை யூட்டுதலாம். அதனுல் உற்சவம் பஞ்சகிருத்தியமாகின்றது. இந்தப் பஞ்சகிருத்தியத்தினலே மலபரிபாகமும் இருவினையொப்பும் எய்தச் சத்திநிபாதமுண்டாகும்: சத்திநிபாதவிசேஷவினை யுணர்த்துவதே தீர்த்தங் கொடுத்தலாம். பத்து நாளும் மூர்த்தியைத் தரிசித்துத் தவவாசம்பண்ணி மலபரிபாகம் இருவினையொப்பு அடைந்தாருக்கே தீர்த்த ஸ்நானமாகிய சத்திநிபாதமுண்டாகும்.

திருவிழா முடிவிலே அநுக்கிரக கிருத்தியமாயுள்ளது தீர்த்தோற்சவம். அஃதாவது மற்றை ஒன்பது நாளும் பலியிடுதலாகிய கன்ம மூட்டுமுகத்தால் ஐந்தொழில் நடத்திய ஆதி சத்தியாகிய அஸ்திர தேவர் தேவசந்நிதியில் தீர்த்தத்திலுள்ளோர் முழுக நாமும் அந்தீர்த்தத்தில் முழுகுகின்றோம். தீர்த்தம் பராசத்தி வடிவாயுள்ளது; அஸ்திரதேவர் ஆதிசத்தியாதலால் அதுநாளும் ஐந்தொழிற்படுத்திப் பரிபாகம் வருவித்த ஆதிசத்தி தன்தொழில் முடிந்தபோது அருட்சத்தியிலே மூழ்க அதன்றுடு நாமும் அந்த அருட்சத்தியாகிய பராசத்தியில் அத்துவிதமாகக் கலந்தலே யுணர்த்தும். ஆதிசத்தி நீங்க அருட்சத்தி பதிதலே சத்திநிபாதமாதலின், தீர்த்த ஸ்நானம் அத்தன்மையையுணர்த்துங் கிரியையாயமைந்துள்ளது. அங்ஙனம் ஆதிசத்தி நீங்க அருட்சத்தியை யடைந்து அந்நிலையில் வெளிப்படும் சிவபெருமானைத் தரிசித்து ஆனந்தவாழ்வு பெறுதல் காட்டித் தீர்த்த ஸ்நானஞ் செய்தோர் அதின்று மேழுந்து சிவதரிசனஞ் செய்யுமுறை தீர்த்தோற்சவத்து வைக்கப்பட்டது. சிவம் ஆன்மாவினிடத்து விளங்குமென்பதனை யுணர்த்த இடபாருடராய் எழுந்தருளுவிப்பர். அருட்சத்தியோடு கூடி ஆன்மாவிற் சிவனைக்கண்டு ஆனந்தவாழ்வுபெறும் நிலையை இத்தீர்த்தோற்சவம் விளக்குகின்றது.

ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்,
அம்பன்கோயில்,
கதுமலை.

## ஒற்றுமை.

(முற்றொடர்.)

12-வது நூற்றுண்டின் இறுதியில் மகம்மது கோரி இந்தியாவின்மேற் படையெடுத்த பொழுது, டில்லியை ஆண்ட பிருதிவிராசன் என்னும் இணையில்லாவீரன்பேரிலுள்ள அசூயையால் கன்னுேஜை ஆண்ட ஜெயச்சந்திரன் கோரியை எதிர்கொண்டழைத்துப் பிருதிவிராஜனை எதிர்த்துத் தோற்கடிக்கும்படி செய்தான். ஆனல் ஜெயச்சந்திரனை அவனது இழிவான செய்கைக்குப் போற்றினர்களா? இல்லை. கோரி, பிருதிவிராஜனின் நாடுகளைக் கைப்பற்றிய பிறகு ஜெயச்சந்திரனையும் விரட்டிவிட்டு அவனது நாட்டையும் கைப்பற்றிக் கொண்டான். அந்தோ! ஒற்றுமையின்மையால் வந்த கேட்டைப் பார்த்தீர்களா?

ரஜபுதனம் மகமதியர்களால் சீர்குலைக்கப்பட்டதும் ஒற்றுமையின்மையாலல்லவா? ராஜபுத்திரசிங்கமாகிய ராணுசிங்கனும், பிரதாபசிங்கும் மொகலாயர்களோடு கொடும்போர் புரிகையில், மற்றுமுள்ள சில ராஜபுத்திரர்கள் எதிரிகளோடு சேர்ந்து கொண்டார்களல்லவா? ஔரங்கசீப்போடு கொடும்போர் புரிந்த ராஜபுத்திரர்களையும் மராட்டியர்களையும் உலகம் போற்றுமா? அவனுடைய சோற்றைத் தின்றுகொண்டு தங்களுடைய சகோதரர்களையே எதிர்த்த ராஜா ஜெயசிங்கைப்போன்ற துரோகிகளைப் போற்றுமா?

தமிழினத்தில், சந்த பீபீ என்னும் வீரமாது அக்பருடைய சேனையோடு தனது நாட்டிற்காகத் தீரமாகச் சண்டைசெய்தும், அவளுடைய நன்றியற்ற வீரர்கள் பணவாசையால் அவளைக் கொன்றர்கள். தமிழணம் சீர்குலைந்ததும், ஒற்றுமையின்மையாலேயே. தென்னிந்தியாவில் கர்நாடக யுத்தத்திலும், மற்றுமுள்ள இடங்களிலும், பலர் தான் தான் அரசனுகவேண்டுமென்று, ஐரோப்பியர்களை ஒத்தாசைக்குக் கூப்பிட்டதும், இறுதியில் தாங்களே அழிந்ததும் நமக்குத் தெரியாததல்ல. பாரதத்தில் கௌரவர்களிடத்து மறுமுறையும் ஸ்ரீ கண்ணபிரானைத் தூதனுப்பிச் சில நாடுகளைப் பெற்று கௌரவர்களுடன் சேர்ந்து வாழவெண்ணிய யுதிஷ்டிரனிடத்தில் அந்த முறையன்றென வாதிக்கும் பீமசேனனைத் தடுத்து மாதவன்

"பிரிவுடன் மற்றிவை கூறும் பவன குமாரனை
மலர்க்கை பணித்து நோக்கி
குருகுலத்தோர் பேரேறே குற்றமது பார்க்குங்
கால் சுற்றமில்லை
ஒருகுலத்தில் பிறந்தார்களுடன் வாழும் வாழ்
வினைப்போ லுறுதியுண்டோ
இருவருக்கும் வசையன்றே விருநிலங்
காரணமாக எதிர்ப்பது"

என்று சொல்லித் தடுத்து ஒன்றுசேர்ந்து வாழ்வதின் பெருமையை விளக்கி யிருக்கிறர்.

"எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்" என்ற முது மொழிப்படியும் "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே—நம்மில் ஒற்றுமை நீங்கிலனைவர்க்கும் தாழ்வே" என்று பாரதியார் கூறியபடியும் நாம் ஒன்றுசேர்ந்து வாழும் வாழ்க்கை யாவும் பெருமையுற்றே இருக்கின்றன.

இப்பரதகண்டத்தில் பூர்வத்தில் ஒற்றுமையினுல் விளைந்த நன்மைகள் அனந்தம். அக்காலத்தில் நமது தேசம் அடைந்த பெருமையே நமக்கு இன்னும் பெருமையாய் விளங்குகின்றது. பிரஜைகள் தங்களை முக்கியமான நான்கு பிரிவாகப் பிரித்துக்கொண்டு ஒருவரோடொருவர் ஒற்றுமையாய் உழைத்து வந்தார்கள்.

ஒரு பிரிவினர் நிலத்தை உழுது பயிரிட்டு ஆகாராதிகளை விளைவித்தனர். மற்றொரு பிரிவினர் அவ்வாகாராதிகளைப் பல இடங்களுக்குங் கொண்டு சென்று ஆங்காங்குள்ள ஜனங்களுக்கு உதவினர். இன்னொருபிரிவினர் கண்ணை இமை காப்பதுபோல் தேசத்தைப் பாதுகாத்துத் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்துவந்தனர். பின்னொரு பிரிவினர் மற்றை மூன்று பிரிவினர்க்கும் நல்லறிவுச்சுடர் கொளுத்திவந்தனர்.

இத்தகைய ஒற்றுமையானது எவ்வளவுகாலம் நிலைபெற்றிருந்ததோ அவ்வளவுகாலமும் நமது க்ஷேமமும் நிலைபெற்றிருந்தது. அக்காலத்தில் கல்வித் திறமையிலும், வைதிக வொழுக்கத்திலும் இராஜ தந்திரத்திலும், தேச நிர்மாணத்திலும், வீரதீர பராக்கிரமங்களிலும் நம்மைமிஞ்சினவர்கள் உலகத்தில் எந்தத் தேசத்திலும் இருந்ததில்லை. அக்காலத்தில் எழுதப்பெற்று இந்நாள் வரைக்கும் நிலைபெற்றிருக்கும் அரிய பெரிய நூற்களே அதற்குச் சான்று பகரும்.

ஆதலால்," ஒற்றுமையாயிருப்பது அவசியம். தற்காலத்தில் பிளவுபட்டிருக்கும் நாம் எல்லோரும் ஒருமனப்பட்டு நாட்டின் நலத்தைக் கருதியேனும் பிராமணர், பிராமணரல்லாதார், இந்து, முஸ்லிம், தீண்டாதார் முதலிய சிறிய வேற்றுமைகளைப் புறக்கணித்துச் சாதிப் பிணக்கை அதிகப்படுத்தாமல் ஒற்றுமையுடன் பொது விஷயங்களில் உழைப்பார்களானுல் நம் நாடு சீக்கிரத்தில் க்ஷேமமடையும்.

உன்னுடைய நல் எண்ணங்களுஞ் செய்கைகளும் நீ ஒரு குகையி லிருந்தாலும் அவைகளெல்லாம் ஒருருவாய்த் திரண்டு அஞ்சத்தக்கவையாயும் சகிக்க முடியாதவையாயும் உன்னைத் தாக்கும். [சுவாமி விவேகாநந்தர்]

அடிமையா யிருக்காதே, தைரியவானுய்ப் பிரகாசி. உண்மையுரைக்க அஞ்சாதே. நியாயத்தைச் செய்யப் பயப்படாதே. உன்னுடைய கடமையைச் செய்வதில் மரணத்திற்குக்கூடப் பயப்படவேண்டாம்.
[சுவாமி தயாநந்த சரஸ்வதி]

பதினுயிர வருடம் ஜீவித்திருக்கப் போவதாய்க் கருதி உன் காலங்களை வீணுளாய்க் கழிக்காதே மரணம் உன் தலைமேலே யிருக்கிறது. நீ உயிருடனிருக்கும்போதே பிறருக்கு நன்மை செய். இது உன்னுல் முடியும்.
[மார்க்கஸ் அருலியஸ்]

கோபத்தை அன்பால் வெல்லு. தீமையை நன்மையால் வெல்லு. லோபத்தைத் தயாளத்தால் வெல்லு. பொய்யை மெய்யால் வெல்லு
[புத்தர்.]

"விவேகாநந்தம்".


## தேவை.

கீரிமலைத் துறவிகள் ஆச்சிரமத்திற்கு யாழ்ப்பாணத்திலும் பிற இடங்களிலும் பணஞ் சேர்ப்பதற்கு ஒரு தகுந்த ஆள் தேவை. சம்பளம் மாதம் ஒருபத்தைந்து ரூபாய். தேர்ந்தெடுக்கப்படுபவர் இருநூறு ரூபாய் பெறுமதியான ஆதனப்பிணை கொடுக்கவேண்டும். விரும்புவோர் யாழ்ப்பாணம் வண்-கிழக்கு ஸ்ரீ வை. சி. சி. குமாரசுவாமி தறுதிகாரி யிடம் 1928-ம் ஞூ வைகாசிமீ 23-ந் திகதிக்கு முன் கேட்க.

(Mis. 1204)

## விளம்பரம்.

கீழே குறிக்கப்பட்ட மரங்கள் பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் உதவி வனபரிபாலனரவர்களால் பின்வருஞ் சொல்லப்படுமிடங்களில் விற்கப்படும்:—

(a) யாழ்ப்பாணம் மரக்காலையில் 1928-ம் ஆண்டு ஆனிமாதம் முதலாந் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு விற்கப்படும் மரங்கள்.

I. 100 பாலைமரங்கள்
II. 10 முதிரைமரங்கள்
III. 3 பொன்னை முருங்கைமரங்கள்
IV. 6 தொண்முதிரைத்துண்டுகள்.

(b) மாங்குளம் மரக்காலையில் 1928-ம் ஆண்டு ஆனிமாதம் 5-ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு விற்கப்படும் மரங்கள்:—

I. 23 முதிரைமரங்கள் = 146 கன அடி
II. 24பாலை ,, = 143 ,, ,,

( ) ஒட்டுசுட்டான் மரக்காலையில் 1928-ம் ஆண்டு ஆனிமாதம் 6-ம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு விற்கப்படும் மரங்கள்:—

I. 20 பாலைமரங்கள் = 275 கன அடி.
II. 47முதிரை ,, = 225 ,, ,,
III. 27 சமண்டலை ,, = 175 ,, ,,
IV. 2 யாவறணை ,, = 23 ,, ,,
V. 1 பொன்னைமுருங்கை ,, = 15 ,, ,,

ஏனைய விபரங்களை 1928-ம் ஆண்டு வைகாசி மாதம் 11-ம் திகதி வெளிவரும் 7,642-ம் இலக்க கெசற் பத்திரிகையிலுள்ள விளம்பரத்திற் காணலாம்.

J. D. SARGENT,
Conservator of Forests,
வனபரிபாலகர்.

வனபரிபாலனர் கந்தோர்,
கண்டி, 8—5—1928.
(G. 899.)

## சுப்பிரமண்ய ஜோதிடம்.

இந்தியா தேசமெங்கும்
தலைமைபெற்றுப் பிரகாசிக்கும்
ஜோதிடாலயம் இதுவே.

உங்கள் அதிஷ்டத்தை ஏன் தெரிந்துகொளளக் கூடாது. இன்றே யெழுதி உங்கள் அதிஷ்டத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

உங்கள் எதிர்காலப் பலனைப்பற்றிய 6 கேள்விகளுக்குப்பதில் எழுத ரூபா 1-00. மேல் தனிக கேள்விகளுககு அணு 4. ஒருவருஷப் பலன் எழுத ரூபா 2-00. கடிதம எழுதும்போது உள்ள நேரத்தை யாவது ஜாதகக் குறிப்பையாவது தெரியப்படுத்தவேணடியது. மற்ற விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

## சர்வஜய வசீகரணி.

தாயித்தை 1-க்கு ரூபா 2—8—0

இது எல்லாவிதமான காரியங்களிலும் ஜெயமபெற்று வருவதுமன்றி செய்வினை பேரய் நல்வினை யுண்டாக்கும். எல்லா விதமான காரியங்களிலும அனுகூலப் படும.

மானேஜர்,
ஸ்ரீ சிவசுப்பிரமணிய
ஜோதிட நிலயம்.
(Q 103) திருத்தணி, சித்தூர்ஜில்லா.

## ஸந்தீபன லேகியம்.

ஓர் புதிய யூனனிமுறை.

இந்த லேகியத்தை மிகவுஞ் சிரமப்பட்டு அரிய பல மூலிகைகளைக்கொண்டும ஸாலாமிஸ்ரி, பஞசாப்மிஸ்ரி, ஸூருஞ் சான்மிஸ்ரி, போஜிதாண்மிஸ்ரி, கீர்மூளனி விரை, இஸ்கூல்விரை, விளாம்பிசின, பேதாஞு முதலிய யூனனி சரக்குகளைக் கொண்டும, நரம்புகளுக்கும் புருஷ ஜனனேந்திரியங்களுக்கும வலுவைக்கொடுத்துக் கெட்டிப்படுத்தி ஸம்பூர்ணமான சுகத்தை அனுபவிக்கும்படியான சரீர திடத்தைக் கொடுக்குமாறு அரிய முறையாய்ச் செய்யப்பட்டு இருக்கிறது. குணமில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

40 நாள் சாப்பிடக்கூடியது ரூ. 2—0—0.

அஸ்வினி
ஆயுர்வேத வைத்தியசாலை,
துக்காச்சேரி,
கொடவாசல் போஸ்டு,
(M. 82) தஞ்சைஜில்லா.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க
மன்னன், கோன்முறை யரசுசெய்க குறை
விலா துயிர்கள்வாழ்க, நான்மறை யறங்க
ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மை
கொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed & published by Pandit V. T. Sambandhan for and on behalf of the Proprietors, the Jaffna Saiva Paripalana Sabai, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai.